10.03.2026

O.S.No. 213/2024

PW1- ராமலட்சுமி – க/பெ. செல்லப்பா

10.03.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 2ம் பிரதிவாதி தரப்பில்)

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

2. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பீடி சுற்றும் தொழில் செய்கிறேன்.

3. வழக்கு பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. 2ம் பிரதிவாதி சண்முகவேல் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

5. 27.04.1988ம் தேதிய ஆவணத்தின் புஞ்சை சர்வே எண்.107/8 சென்ட் 28ல் வடபக்கம் 4 சென்ட் நீங்கலாக தான் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சாட்சியிடம் வா.சா.ஆ.1 காண்பிக்கப்பட்டு கேள்வி கேட்கப்பட்டது. ஆவணத்தை பார்த்து சாட்சி வடபக்கம் 4 சென்ட் நீங்கலாக எழுதப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டார்.

6. வா.சா.ஆ.1ன் அடிப்படையில் தான் வா.சா.ஆ.2–ஐ என் தகப்பனார் எழுதுவதற்கு உரிமை உள்ளது என்றால் சரிதான்.

7. வடபக்கம் 4 சென்ட் நீங்கலாக கிரைய்ம பெற்ற நிலையில் அந்த 4 சென்டில் 1.1/2 சென்ட் கீழ்பக்கம் உள்ள இடத்தை எவ்வாறு வா.சா.ஆ.2ன் மூலம் எனக்கு பாத்தியப்படுத்தினார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

8. எனக்கு வழக்கை பற்றிய விவரம் தெரியாது விவரங்கள் அனைத்தும் என் கணவருக்கு தான் தெரியும்.

9. வழக்கு சொத்தின் எல்கை மால் தெரியுமா என்றால் தெரியாது.

10. சர்வே எண்.107/8Aல் 5 ஏர் உள்ளதாக நான் பிராது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11. 5 ஏரில் 3.85 ஏர் –ஐ பொறுத்து நான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள 1.15 ஏர் –ஐ பொறுத்து எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

12. சாட்சிக்கு சாட்சியம் சொல்ல விவரம் தெரியாததால் 3ம் தரப்பு ஆவணத்தை குறியீடு செய்ய இயலாததால் சாட்சி மூலம் ஆவணம் மட்டுமே குறியிடு செய்யப்படுகிறது. முதல் விசாரணையில் கண்ட சங்கதிகள் விவரம் தெரியாததால் நிராகரிக்கப்படுகிறது. கூடுதல் சாட்சியம் மூலம் விசாரணை தாக்கல் செய்ய கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

13. வழக்கு சொத்திற்கும் நான் தாக்கல் செய்த ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லாததால் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

14. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 மற்றும் 6 வரையிலான ஆவணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

ஒம்/−J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி